Ours bank with Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily

தினசரி தமிழ் நாளிதழ் ®

ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House (A Heritage Hotel)

2342971 (3 Lines) 4372900 (4 Lines) 99526 02900 95669 84900
E-Mail: collegehouse_mdu@yahoo.co.in
College House Annameenakshi Restaurant (Veg.)
2, Town Hall Road, Madurai-625 001.


| மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 131 | உள்ளூர் - 11.05.2026 | திங்கள் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com |
|---|---|---|---|---|---|---|---|
| Madurai Edition | *Vol 55 | * Issue 131 | வெளியூர் - 12.05.2026 | செவ்வாய் | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com |


விஷ யோகம்: ஜாதகத்தில் அதன் தாக்கம் / பரிகாரங்கள்!

சிஎஸ்ஐஆர்-(சேர்க்), சென்னை, 93 வேலைவாய்ப்புகள்!

நயினாருக்கு எதிராக அண்ணாமலை ஆதரவாளர்கள் போர்க்கொடி!

எதிரொலிக்கும் அதிமுக உள்கட்சி பூசல்?

## சீனா செல்கிறார் அமெரிக்க அதிபர் டிரம்ப்!!



பெய்ஜிங், மே,. 11–

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப மே 13 முதல் 15 வரை மூன்று நாள்கள் அரசு முறைப் பயணம் சீனா செல்கிறார். வர்த்தகம், பாதுகாப்பு, சர்வதேச விவகாரங்கள் குறித்து பேச அதிபர் ஜி ஜின்பிங் அழைப்பை ஏற்று அரசுமுறைப் பயணமாக அமெரிக்கா அதிபர் டிரம்ப், சீனா செல்கிறார். இந்த சந்திப்பின்போது டிரம்ப், சீன அதிபர் ஜி ஜின்பிங்குடன் பேச்சுவார்த்தை நடத்த வுள்ளார். சீன அதிபர் ஜி ஜின்பிங்கின் அழைப்பின் பேரில், அவர் சீனாவுக்கு வருகை தர உள்ளதாக சீன வெளியுறவு அமைச்சக செய்தித் தொடர்பாளர் அறிவித்தார். கிட்டத்தட்ட ஒன்பது ஆண்டுகளுக்கு பின் அமெரிக்க அதிபர் சீனாவுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

நீடித்த அமெரிக்க–இஸ்ரேல் ஈரான் போர், ஹோர்முஸ் நீரிணை முற்று கைவினால் ஏற்பட்டுள்ள உலகளாவிய ஏரிசக்தி நெருக்கடி மற்றும் தைவான் உள்ளிட்ட பல்வேறு பிரச்சி னைகள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையே அதிகரித்து வரும் பதற்றங்க ளுக்கு மத்தியில் இந்தப் பயணம் நடைபெறுகிறது. டிரம்பின் இந்த சுற்றுப்பய ணத்தின்போது, நாடுகளுக்கு இடையே வர்த்தக ஒப்பந்தம் ஏற்படும் என்ற எதிர்பார்ப்பு நிலவி வருகிறது. அத்துடன், பொருளாதாரம் மற்றும் வர்த்தகப் பிரச்சினைகள் குறித்து இரு தலைவர்களும் விவாதிப்பார்கள் என சீன வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

## சோமநாதர் கோவிலில் பிரதமர் மோடி சிறப்பு வழிபாடு!



சோம்நாத், மே. 11–

குஜராத் மாநிலத்தில் உள்ள சோமநாதர் கோவில் பன்னிரு சிவ திருத்த லங்களில் முதன்மையானது ஆகும். ஆயிரம் ஆண்டுகள் பழமையான இந்த கோவிலில் அப்போது பொன்னும் பொருளும் நிரம்பி இருந்தன. இதனை கஜினி முகமது கொள்ளையடித்து சென்ற தாக வரலாறு உள்ளது. அவர் 17 முறை இந்த கோவிலில் சூறையாடி இருக்கிறார். முகலாய மன்னர்களால் சிதிலமடைந்த இந்த கோவில் கடந்த 75 ஆண்டுகளுக்கு முன்பு சர்தார் வல்லபாய் பட்டேல் தலைமையில் புனரமைக்கப்பட்டது.

கோவில் புனரமைக்கப்பட்ட 75 ஆண்டுகளின் நிறைவு விழா மே. 11 (இன்று)) கொண்டாடப்பட்டது. இதனை முன்னிட்டு கடந்த 8–ந் தேதியே விழா தொடங்கியது.

## முதல்-அமைச்சர் விஜய்யை தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த பிரதமர் மோடி!



டெல்லி, மே. 11–

தமிழக சட்டசபை தேர்தலில் தவெக 108 தொகுதிகளை கைப்பற்றது. இதையடுத்து, காங்கிரஸ், விசிக, கம்யூனிஸ்டுகள், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவோடு தவெக ஆட்சி அமைத்தது.

தமிழக முதல்–அமைச்சராக தவெக தலைவர் விஜய் இன்று பதவியேற்றார். பொறுப்பு கவர்னர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் விஜய்க்கு முதல்–அமைச்ச ராக பதவி பிரமாணம் செய்து வைத்தார். அவருடன் தவெக எம்.எல்.ஏ.க்கள் 9 பேர் அமைச்சர்களாக பொறுப்பேற்றுக்கொண்டனர்.

இந்நிலையில், முதல்–அமைச்சர் விஜய்யை பிரதமர் மோடி தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார். முதல்–அமைச்சராக பொறுப்பேற்றுள்ள விஜய்க்கு பிரதமர் மோடி வாழ்த்து தெரிவித்தார்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், தற்காலிக சட்டமன்றப் பேரவை தலைவர் கருப்பையா, தமிழ்நாடு முதலமைச்சர் ச. ஜோசப் விஜய்க்கு சட்டமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

## மு.க.ஸ்டாலினை சந்திக்க முதல்-அமைச்சர் விஜய் திட்டம்?



சென்னை, மே. 11–

முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின் தவெக தலைவரும் தமிழக முதல்வரு மான ஜோசப் விஜய் சந்திக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.


17–வது சட்டப்பேரவையின் முதல் கூட்டம் இன்று காலை தொடங்கியது. இதில், தற்காலிக பேரவைத் தலைவர் கருப்பையா முன்னிலையில், முதல்வர் ஜோசப் விஜய் உட்பட பேரவையின் புதிய உறுப்பினர்கள் எம்எல்ஏவாக பதவி யேற்றனர். இந்த பதவியேற்பு முடிந்த பிறகு முக்கிய அரசியல் தலைவர்கள் பலரையும் முதல்வர் ஜோசப் விஜய் சந்திக்க திட்டமிட்டிருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது ஆழ்வார்பேட்டை வீட்டுக்கு நேரில் சென்று வாழ்த்து பெற இருப்பதாக கூறப்படுகிறது. அதே போல மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோரையும் அவர் சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது.

முன்னதாக நேற்று முதல்வராக பதவியேற்ற கையோடு பெரியார் திடலுக்குச் சென்ற ஜோசப் விஜய் அங்கு திராவிடர் கழகத்தின் தலைவர் கி.வீரமணியை நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றது குறிப்பிட த்தக்கது. தவெக தலைவர் ஜோசப் விஜய் தனது தேர்தல் பிரச்சாரங்களில் திமுகவையும், ஸ்டாலினையும் எதிர்த்தே பேசி வந்த நிலையில், இந்த சந்தித்து ஆரோக்கியமான அரசியலுக்கான முன்னெடுப்பாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## இந்தியாவில் "எனர்ஜி லாக்டவுன்"?

# பேருந்து, ரயில்களை பயன்படுத்துக! தங்கம் வேண்டாம்..!!

## பிரதமர் அறிவுரை!!




புதுடெல்லி, மே. 11–

பிப்ரவரி 28ஆம் தேதி தொடங்கிய ஈரான் போர் இதுவரை சமாதானத்தை நோக்கி செல்லவே இல்லை. தற்போதைக்கு தாக்குதல்கள் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்தாலும் ஹார்முஸ் ஜலசந்தி விவகாரத்தில் அமெரிக்காவும் ஈரானும் எந்த ஒரு முடிவையும் எட்டாமலேயே இருக்கின்றன. இந்தியா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கும் வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி உள்ளிட்டவை இரண்டு மாதங்களுக்கும் மேலாக சப்ளை செய்யப்படாமல் இருக்கிறது. இந்தியா தனக்கு தேவையான பெருபான்மையான கச்சா எண்ணெய் மற்றும் எல்பிஜி, உரம் ஆகியவற்றை வளைகுடா நாடுகளில் இருந்து தான் வாங்குகிறது. இரண்டு மாதமாக அந்த சப்ளை வரவில்லை. இதனால் இந்தியாவை சேர்ந்த எண்ணெய் நிறுவனங்கள் அதிக விலை கொடுத்து கச்சா எண்ணெய் வாங்கி பெட்ரோல், டீசல் ஆக சுத்தி கரித்து நமக்கு விற்பனை செய்கின்றன. இதனால் ஒவ்வொரு லிட்டர் பெட்ரோல், டீசல் விற்பனையிலும் இந்தியன் ஆயில் கார்ப்பரே ஷன், பாரத் பெட்ரோலியம் ,ஹெச்பி ஆகிய நிறுவனங்க ளுக்கு 20 ரூபாய்க்கு மேல் நஷ்டம் ஏற்படுகிறது. இத னால் கூடிய விரைவில் பெட்ரோல் , டீசல் விலைகள் உயர்த்தப்படும் என தகவல் வெளியானது. இந்த சூழலில் பிரதமர் நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு முக்கியமான ஒரு அறிவு றுத்தலை வெளியிட்டு இருக்கிறார்.

நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசிய பிரதமர் நரேந்திர மோடி, பல்வேறு நாடுகளிலும் கடுமையாக பெட்ரோல் ,டீசல் விலைகள் உயர்ந்துள்ளன என்றார். இந்தியா பெட்ரோல், டீசல் வாங்குவதற்காக செலவி டப்படும் அன்னிய செலாவ ணியை சேமிக்க , பெட்ரோல் டீசலை சிக்க னமாக பயன்படுத்துவது நம் அனைவரின் பொறுப்பு எனக் கூறியிருக்கிறார்.

மேலும் ஓராண்டு காலத்தி ற்கு மக்கள் தங்கம் வாங்க வேண்டாம் என்றும் அவர் கோரிக்கை வைத்திருக்கி றார். கடினமான பொருளாதார சூழ்நிலையில் நாட்டின் வளங்களை சேமிப்பதில் கவனம் செலுத்த வேண்டும் என்றும் கொரோனா காலத்தில் வீட்டிலிருந்தே வேலை செய்வது, ஆன்லைன் மீட்டிங் மற்றும் வீடியோ கான்ஃபரன்ஸ் போன்ற முறைகளுக்கு மக்கள் எளிதாக பழகிவிட்டனர். எரிபொருள் நுகர்வை மிச்சப்படுத்த இதே போன்ற ஒரு நடைமுறையை மீண்டும் ஊக்கப்படுத்த வேண்டும் எனக் கூறியிருக்கிறார்.

நாம் சேமிக்கும் ஒவ்வொரு லிட்டர் பெட்ரோல் மற்றும் டீசலும் எரிபொருள் இறக்கும திக்காக இந்தியா அந்நிய கலாவணி செலவிடுவதை குறைக்கும் என பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தி ருக்கிறார். மேலும் பொது மக்கள் வெளிநாட்டு சுற்றுலாக்களை தவிர்க்க வேண்டும் என்ற கோரிக்கையும் அவர் முன் வைத்திருக்கிறார். இவ்வாறு செய்வதன் மூலம் அந்நிய செலாவணியை சேமிக்க முடியும் என்றும் ஈரான் போரினால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகளை குறைக்க முடியும் என்றும் பிரதமர் நரேந்திர மோடி சுட்டிக்காட்டி இருக்கிறார்.

எனவே கொரோனா காலத்தைப் போன்ற சில கட்டுப்பாடுகள் விரைவில் அறிவிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் உண்டாகி இருப்பதையே பிரதமர் நரேந்திர மோடியின் இந்த வேண்டுகோள் சுட்டிக்காட்டு கிறது. ஏற்கனவே பிலிப்பைன்ஸ் போன்ற நாடுகளில் எனர்ஜி லாக்டவுன் அறிவிக்கப்பட்டு விட்டது. இந்தியாவும் விரைவில் எனர்ஜி லாக்டவுனை போன்ற ஒரு சூழலை நோக்கி தான் செல்கிறதோ என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் ஈரான் போர் தணியவில்லை, எப்போது போர் முடிந்து ஹார்முஸ் ஜலசந்தியில் வழக்கத்தை போல கச்சா எண்ணெய் விநியோகம் சீராகும் என்பது தெரிய வரவில்லை. இன்றே போர் நின்றாலும் கூட கச்சா எண்ணெய் விநியோகம் சீராவதற்கு பல மாதங்கள் ஆகும். இந்தியாவை பொறுத்தவரை தனக்கு தேவையான கச்சா எண்ணெ யை வெளிநாடுகளில் இருந்து மட்டுமே இறக்குமதி செய்கிறது. போர் சூழல் காரணமாக கச்சா எண்ணெயை அதிக விலை கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது. இதனால் இந்திய ரூபாயின் மதிப்பு குறைந்து அமெரிக்க டாலரின் மதிப்பு உயர்ந்தி ருக்கிறது. எனவே நம் கையிருப்பில் இருக்கக்கூடிய அதிகபட்ச பணத்தை கொடுத்து தான் நாம் கச்சா எண்ணெயை வாங்கி பெட்ரோல் டீசல் ஆக மாற்றி பயன்படுத்துகிறோம். கச்சா எண்ணெய் வாங்கவே அதிக டாலரை பயன்படுத்த வேண்டி இருப்பதால் நம் கைவசம் அந்நிய செலாவணி இருப்பு குறைகிறது, இது நாட்டின் பொருளாதாரத்திலேயே தாக்கத்தை ஏற்படுத்தும். எனவே தான் பொதுமக்கள் அரசு பேருந்துகள் , மெட்ரோ போன்ற பொது போக்குவரத்தை அதிகமாக பயன்படுத்த வேண்டும் ஒரு நபர் தனியாக ஒரு காரை பயன்படுத்துவதற்கு மாற்றாக இரண்டு மூன்று பேர் சேர்ந்து பயன்படுத்த வேண்டும் என மோடி கேட்டுக் கொண்டி ருக்கிறார். மேலும் மின்சார வாகனங்கள் , ரயில் போக்கு வரத்து உள்ளிட்டவற்றை அதிகமாக பயன்படுத்த வேண்டும் என வலியுறுத்தி யுள்ளார். போர்க்களத்தில் நின்று தான் நாம் நாட்டிற்காக தியாகம் செய்ய வேண்டும் என்ற அவசியம் கிடையாது இது போன்ற நெருக்கடியான பொருளாதார சூழல்களின் போது பொறுப்புடன் செயல்படுவதும் ஒரு போர்க்களத்தில் நின்று நாட்டுக்காக போராடுவதற்கு சமம் என பிரதமர் நரேந்திர மோடி கூறியுள்ளார்.

## அசாம் முதல்-மந்திரியாக ஹிமந்த் பிஸ்வா சர்மா பதவியேற்பு; பிரதமர் மோடி பங்கேற்பு!



கவுகாத்தி, மே. 11–

கடந்த மாதம் 9–ந்தேதி, அசாம் சட்டசபை தேர்தல் ஒரே கட்ட மாக நடந்தது. அதில், மொத்தம் உள்ள 126 தொகுதிகளில் பா.ஜனதா தலைமையி லான தேசிய ஜனநாயக கூட்டணி 102 தொகுதிகளில் வெற்றி பெற்றது. பா.ஜனதா மட்டும் 82 தொகுதிகளை கைப்பற்றியது. இதைத்தொடர்ந்து, புதிய முதல்–மந்தி ரியை தேர்ந்தெடுப்ப தற்காக, அசாம் தலைநகர் கவுகாத்தியில் பா.ஜனதா எம். எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. இதில் தற்போதைய முதல்–மந்திரி ஹிமந்த பிஸ்வா சர்மா. முதல்–மந்திரியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். தொடர்ந்து தேசிய ஜனநாயக கூட்டணி எம். எல்.ஏ.க்கள் கூட்டத்திலும் அவர் தேர்வு செய்யப்பட்டார். பின்னர், ஹிமந்த பிஸ்வா சர்மா. கவர்னர் லட்சுமண் பிரசாத் ஆச்சாரியாவை சந்தித்து ஆட்சி அமைக்க உரிமை கோரி கடிதத்தை அளித்தார். கவர்னர் ஏற்றுக்கொண்டதால் ஹிமந்த பிஸ்வா சர்மா தலைமை யிலான புதிய அரசின் பதவி யேற்பு விழா, நாளை (செவ்வாய்க்கிழமை) நடக்கிறது. பிரதமர் மோடி மற்றும் மத்திய மந்திரிகள் கலந்து கொள்கிறார்கள்.

தலையங்கம்

மதுரை மணி

திங்கட்கிழமை 11.05.2026

விசுவாவசு தமிழ் வருடம்

சித்திரை மாதம் 28-ம் தேதி

# வெடிக்க காத்திருக்கும் பெட்ரோல், டீசல் பிரச்சனை!!



இந்தியா உட்பட உலகின் பல்வேறு நாடுகளுக்கும் வளைகுடா நாடுகளில் இருந்து தான் கச்சா எண்ணெய் விற்பனை செய்யப்படுகிறது. இந்தியா தனக்கு தேவையான 100 சதவீத கச்சா எண்ணெயை வெளிநாடுகளில் இருந்து தான் கொள்முதல் செய்கிறது.

இந்தியாவில் பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் வெளிநாடுகளிடமிருந்து கச்சா எண்ணையை வாங்கி அதனை பெட்ரோல் மற்றும் டீசல் ஆக மாற்றி பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் விற்பனை செய்கின்றன. பிப்ரவரி 28ஆம் தேதியிலிருந்து இந்தியாவுக்கு வளைகுடா நாடுகளில் இருந்து கச்சா எண்ணெய் வரவில்லை. இதனால் அதிக விலை கொடுத்து ரஷ்யா ,அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து இந்தியா கச்சா எண்ணெய் வாங்குகிறது.

வளைகுடா நாடுகளில் இருந்து கிடைக்கும் கச்சா எண்ணெய் போல இல்லாமல் ரஷ்யா மற்றும் பிற நாடுகளில் இருந்து வாங்கக்கூடிய கச்சா எண்ணெய் அதிக செலவு செய்து பெட்ரோல் டீசலாக சுத்திகரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. இதனால் இந்தியாவை சேர்ந்த பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிறுவனங்களுக்கு பெரிய அளவில் நஷ்டம் ஏற்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் கணிசமாக முப்பதாயிரம் கோடி ரூபாய் இழப்பு ஏற்படுவதாக தகவல் வெளியாகியுள்ளது.

சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்ந்த போதிலும் உள்நாட்டில் பெட்ரோல் டீசல் விலை உயர்த்தப்படாததால் இந்திய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களுக்கு ஒவ்வொரு மாதமும் 30,000 கோடி ரூபாய் இழப்பு ஏற்படுகிறதாம். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் , பாரத் பெட்ரோலியம், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் உள்ளிட்ட பொதுத்துறை நிறுவனங்கள் தற்போதைக்கு இந்த நஷ்டத்தை தாங்களே ஏற்றுக் கொண்டிருக்கின்றன.

ஒவ்வொரு லிட்டர் டீசல் விற்பனையிலும் 30 ரூபாயும் ஒவ்வொரு லிட்டர் பெட்ரோல் விற்பனையிலும் 24 ரூபாயும் இந்த நிறுவனங்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. எண்ணெய் நிறுவனங்கள் மீதான சுமையை குறைக்கும் பொருட்டு கடந்த மாதம் அரசு பெட்ரோல் டீசல் மீதான கலால் வரிகளை குறைத்தது. இதனால் ஓரளவு நஷ்டம் ஈடு செய்யப்பட்டாலும் முழுமையாக அது ஈடு செய்யப்பட முடியவில்லை.

அந்த வகையில் மார்ச் மாதம் முதல் இந்தியாவை சேர்ந்த மூன்று பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்களும் 30,000 கோடி ரூபாய் இழப்பினை சந்தித்திருக்கின்றன. எனவே நிலைமை இப்படியே சென்றால் வேறு வழி இல்லாமல் பெட்ரோல் டீசல் விலைகளை உயர்த்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என சொல்லப்படுகிறது. ஏனெனில் ஹார்முஸ் ஜலசந்தியில் கப்பல் போக்குவரத்து இன்னும் சீராகவில்லை உடனடியாக இந்த பிரச்சனை தீர்க்கப்பட்டாலும் கப்பல் போக்குவரத்து சீராவதற்கு பல மாதங்கள் ஆகும்.

கச்சா எண்ணெய் விநியோகம் பழைய நிலைக்கு திரும்புவதற்கு ஒரு வருடத்திற்கு மேலாகும் என சொல்லப்படுகிறது. அதுவரையில் கச்சா எண்ணெய் விலை பெரிய அளவில் குறையாது. எனவே ஒரு குறிப்பிட்ட அளவிற்கு மேல் எண்ணெய் நிறுவனங்களால் நஷ்டத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்பதால் இந்தியாவில் பெட்ரோல், டீசல் விலை உயர்வுக்கான சாத்தியங்கள் அதிகரிப்பதாகவே சொல்லப்படுகிறது.

ஏற்கனவே ஜப்பான் , பிரிட்டன் , பிரான்ஸ், இலங்கை, பாகிஸ்தான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளிலும் பெட்ரோல், டீசல் விலைகள் பல மடங்கு உயர்த்தப்பட்டு விட்டன. ஈரான் போருக்கு முன்பு 69 ரூபாய்க்கு கிடைத்த ஒரு பேரல் கச்சா எண்ணெய் தற்போது 150 ரூபாய்க்கு கிடைப்பதாக எண்ணெய் நிறுவனங்கள் கூறுகின்றன. பல்வேறு நாடுகளிலும் 20 சதவீதத்திற்கும் மேல் பெட்ரோல் , டீசல் விலைகள் உயர்த்தப்பட்டு விட்ட நிலையில் இந்தியாவில் மட்டும் இன்னும் உயர்த்தாமலே இருக்கிறது. அந்த வகையில் கூடிய விரைவில் பெட்ரோல் டீசல் விலை உயர்வதற்கான வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. பெட்ரோல் டீசல் விலை உயர்ந்தால் பல்வேறு அத்தியாவசிய பொருட்களின் விலைகளை உயர்த்தும். இது நேரடியாகவே சாமானிய மக்களின் பட்ஜெட்டிலேயே தாக்கத்தை ஏற்படுத்தும்.

# நயினருக்கு எதிராக அண்ணாமலை ஆதரவாளர்கள் போர்க்கொடி!



மதுரை, மே. 11–

சட்டப்பேரவைத் தேர்தல் தோல்வி காரணமாக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் பதவி விலக அண்ணாமலை ஆதரவாளர்கள் குரல் எழுப்பத் தொடங்கி உள்ளனர்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி அமைத்து 27 தொகுதிகளில் பாஜக போட்டியிட்டது. இதில் உதகை தொகுதியில் மட்டும் பாஜக வேட்பாளர் 976 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். சாத்தூரில் போட்டியிட்ட பாஜக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட அனைவரும் தோல்வியைத் தழுவினர்.

இந்தத் தேர்தலில் பாஜக 14 லட்சத்து 67,024 வாக்குகளைப் பெற்று 2.97 சதவீத வாக்குகளைப் பெற்றுள்ளது. கடந்த 2024 மக்களவைத் தேர்தலில் பாஜக தனித்துப் போட்டியிட்டு 11.24 சதவீத வாக்குகளைப் பெற்றது. இந்தத் தேர்தலில் பெரிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்தும் வாக்கு சதவீதம் கணிசமாகக் குறைந்துள்ளது.

தமிழக பாஜக கூட்டுறவு பிரிவுத் தலைவர் மகா சுசீந்திரன் படத்துடன், ‘சாணக்கியர் சறுக்கினாரோ’ என்ற தலைப்பிலான அறிக்கை பாஜகவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்த அறிக்கை நயினார் நாகேந்திரனை குறைகூறும் வகையிலும், அண்ணாமலையைப் பாராட்டும் வகையிலும் அமைந்துள்ளது.

அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்ததாவது: பாஜகவின் லட்சக்கணக்கான தொண்டர்களின் உழைப்பு 2026 தேர்தலில் அடையாளம் இல்லாமல் காற்றில் கரைந்துள்ளது. தமிழகத்தில் பாஜகவின் 3 சதவீத வாக்கு வங்கி 2021–ல் 18 சதவீதமாக உயர்ந்து இரு பெரும் திராவிட கட்சிகளுக்கு சவாலாக உயர்ந்தோம். சுயநலவாதிகள் கருத்தைக் கேட்டு கட்சியை வளர்த்த ‘கோபுரக் கலசத்தை’ குழியில் தள்ளிவிட்டு பிற இயக்கத்தின் ‘காகத்தை கழுகு’ என நினைத்து சாணக்கியர் சறுக்கினாரோ என மனம் வருந்துகிறது.

இந்த வருத்தம் என்னால் ஏற்பட்டது என உணர்ந்தால், பாஜகவின் லட்சக்கணக்கான தொண்டர்களின் பாதங்களில் விழுந்து மன்னிப்புக் கேட்டு நானும் என் தலைமையிலான குழுவும் அனைத்துப் பொறுப்புகளில் இருந்து விடைபெறுகிறோம் என தோல்வியை ஒப்புக்கொண்டிருப்போம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இதுகுறித்து பாஜகவினர் கூறியதாவது: அண்ணாமலை தலைவராக இருந்தபோது கட்சி வேகமாக வளர்ந்தது. நயினார் நாகேந்திரன் தலைவரானதும் பாஜக அதிமுகவின் ஒரு கிளை அமைப்புபோல் மாறிவிட்டது. வேறு கட்சிகளில் இருந்து குறிப்பாக திராவிடக் கட்சிகளில் இருந்து வந்தோருக்கு கட்சியில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டது.

அண்ணாமலை எதிர்ப்பு என்ற ஒற்றைக் காரணத்துக்காக தமிழிசை, எல்.முருகன், வானதி சீனிவாசன் ஆகியோர் நயினார் நாகேந்திரனுடன் இணைந்து செயல்பட்டனர். அனைத்துத்தொகுதிகளிலும் பாஜக பின்னுக்குத் தள்ளப்பட்டது. இந்த படுதோல்விக்கு நயினார் நாகேந்திரன் பொறுப்பேற்க வேண்டும். மேலிடம் அவரை தலைவர் பதவியிலிருந்து மாற்றி புதிய தலைவரை நியமிக்க வேண்டும். இவ்வாறு கூறியுள்ளனர்.

# முதல்-அமைச்சரின் நேரடிக் கண்காணிப்பில் ‘சிங்கப்பெண் அதிரடிப் படை’ - அரசாணை வெளியீடு!




சென்னை, மே. 11–

சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையின் செயல்பாடுகள்:–

* குற்றச் சம்பவங்கள் நிகழ வாய்ப்புள்ள இடங்களை கண்டறிந்து கண்காணித்தல், பொது இடங்களில் கண்காணிப்பு மற்றும் தங்கள் இருப்பை மேம்படுத்தி, சுற்றுக்காவல் பணிகள் மேற்கொண்டு, குற்றச்சம்பவங்கள் நடைபெறாமல் தடுத்து, பொது இடங்களில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குதல்.

* பேருந்து நிறுத்தங்கள், ரெயில் நிலையங்கள், கல்வி நிலையங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள இடங்கள் உள்ளிட்ட பொதுமக்கள் அதிக அளவில் செல்லக்கூடிய மற்றும் நெருக்கடி மிகுந்த பகுதிகளில், தங்கள் இருப்பை அதிக அளவில் வெளிப்படுத்தி, சட்டவிரோத செயல்களை தடுத்தல்.

* புகார்கள் மீது விரைந்து உரிய நடவடிக்கை எடுத்தல்.

* பாதிக்கப்பட்ட நபர்களை மீட்டு, அவர்களது பாதுகாப்பு மற்றும் நலனை உறுதி செய்வதுடன், இதர ஆதரவுகள் கிடைத்திட வகை செய்வது உள்ளிட்ட உதவிகளை உரிய நேரத்தில் செய்தல்.

* சமூக நலத்துறை, கல்வித்துறை, அரசு சாரா தொண்டு நிறுனங்கள் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட முகமைகளுடன் ஒருங்கிணைந்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், சமூகத்தில் பலதரப்பட்ட மக்களை ஒருங்கிணைத்து, பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் பணிகளில் ஈடுபடுதல்.

காவல்துறை தலைமை இயக்குனரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, பெண்களின் பாதுகாப்பினை மேம்படுத்தும் பொருட்டு, தடுப்பு மற்றும் பாதுகாப்பு உத்திகளை முதன்மை மற்றும் ஒற்றை இலக்காகக் கொண்டு செயல்படக் கூடிய, ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ உருவாக்கவும் முதற்கட்டமாக காவல் துறை தலைமையகத்தில் பின்வரும் பணியிடங்களுக்கு நிர்வாக ஒப்புதல் அளித்து அரசு ஆணையிடுகிறது. இந்த ‘சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை’ முதல்–அமைச்சரின் நேரடி கண்காணிப்பின் கீழ் இயங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# சபாநாயகர் ஆகிறார், ஜே.சி.டி. பிரபாகர்!



சென்னை, மே. 11–

தமிழக சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்றுள்ள 233 எம்.எல்.ஏ.க்கள் தற்காலிக சபாநாயகர் கருப்பையா முன்னிலையில் (திங்கட்கிழமை) பதவி ஏற்கிறார்கள். இதைத்தொடர்ந்து முறைப்படி சபாநாயகர் தேர்வு நடைபெறுகிறது. த.வெ.க. சார்பில் சென்னை ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜே.சி.டி. பிரபாகர் அமைச்சரவையில் இடம் பெறுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அவர், சபாநாயகராக தேர்வு செய்யப்பட உள்ளார். இதற்காக மே. 12 (செவ்வாய்க்கிழமை) சட்டசபை கூடுகிறது. எதிர்க்கட்சி சார்பில் வேறு ஒருவரை சபாநாயகராக முன்மொழிந்தால் குரல் வாக்கெடுப்பு நடைபெறும். இல்லையென்றால் ஜே.சி.டி.பிரபாகர் ஒருமனதாக சபாநாயகராக தேர்வு செய்யப்படுவார். இதைத்தொடர்ந்து அவரை முதல்–அமைச்சர் விஜய், எதிர்க்கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வாழ்த்தி பேசுவார்கள்.

# தமிழ்நாட்டின் புதிய எம்.எல்.ஏ.க்கள் 126 பேர் மீது குற்ற வழக்குகள்!



சென்னை, மே. 11–

தமிழ்நாட்டில் த.வெ.க. தலைவர் விஜய் தலைமையில் நேற்று கூட்டணி அரசு பதவியேற்றது. இந்த தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இன்று சட்டசபையில் எம்.எல்.ஏ.வாக பதவியேற்கிறார்கள். புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் குற்றப்பின்னணியை ஜனநாயக சீர்திருத்தத்துக்கான அமைப்பு (ஏ.டி.ஆர்.) ஆய்வு செய்து அறிக்கை வெளியிட்டு உள்ளது.

அதன்படி, மாநிலத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட 233 எம்.எல்.ஏ.க்களில் 126 பேர் மீது அதாவது 54 சதவீதத்தினர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் நிலுவையில் இருப்பதாக கூறப்பட்டு உள்ளது. கட்சிகளைப் பொறுத்தவரை அதிகபட்சமாக த.வெ.க.வின் 107 எம்.எல்.ஏ.க்களில் 41 பேர் வழக்குகளில சிக்கி உள்ளனர். தி.மு.க.வின் 59 பேரில் 37 பேர், அ.தி.மு.க.வின் 47 பேரில் 33 பேர், காங்கிரசின் 5–ல் 3 பேர், பாட்டாளி மக்கள் கட்சியில் வெற்றி பெற்ற 4 பேர் மீதும் வழக்குகள் உள்ளன.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, விடுதலை சிறுத்தைகள் கட்சிகளில் வெற்றி பெற்ற தலா 2 பேர் மீதும், இந்திய கம்யூனிஸ்டு, இந் திய யூனியன் முஸ்லிம் லீக் கட்சிகளில் தலா ஒருவர். அ.ம.மு.க., தே.மு.தி.க. கட்சிகளில் வெற்றி பெற்ற இருவர் மீதும் வழக்குகள் இருப்பதாக தங்கள் பிரமாண பத்திரங்களில் தெரிவித்து உள்ளனர். இதல் 56 பேர் (24 சதவீதம்) மீது கடுமையான குற்ற வழக்கு கள் இருப்பது கண்டறியப்பட்டு உள்ளது.

அந்தவகையில் த.வெ.க.வின் 19 பேர், தி.மு.க.வின் 14 பேர், அ.தி.மு.க.வின் 14 பேர், காங்கிரசை சேர்ந்த 2 பேரும் கடுமையான வழக்கை எதிர்கொண்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மீது கொலை வழக்கு. 6 பேருக்கு எதிராக கொலை முயற்சி வழக்கு, 2 பேருக்கு எதிராக பெண்களுக்கு எதிரான குற்ற வழக்குகள் நிலுவையில் இருக்கின்றன. வெற்றி பெற்ற 233 எம்.எல்.ஏ.க்களில் 193 பேர் (83 சதவீதம்) கோடீஸ்வரர்கள் ஆவர். இதில் அ.தி.மு.க.வின் லால்குடி எம்.எல்.ஏ.வான லீமா ரோஸ் மார்ட்டின் ரூ.5,863 கோடியுடன் முதலிடத்தில் உள்ளார்.

# எதிரொலிக்கும் அதிமுக உள்கட்சி பூசல்?



சென்னை, மே 11–

அதிமுகவில் தலைமைப் பதவிக்கு நிலவும் மோதலால் தனது ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் 5 பேருடன் எடப்பாடி பழனிசாமி சட்டசபைக்கு வந்தார். எடப்பாடி வருகை தந்த பிறகு எஸ்.பி.வேலுமணி தலைமையில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ஒரு குழுவினராக சட்டசபைக்கு வருகை தந்தனர். 13–ந் தேதிக்குள், அரசின் மீதான நம்பிக்கை கோரும் தீர்மானத்தை சட்டசபையில் நிறைவேற்றி பெரும்பான்மையை நிரூ பிப்பதற்கு கவர்னர் உத்தரவிட்டுள்ளார். இதற்காக சட்டசபை எப்போது கூடும் என்பது தெரியவரும்.

# மெக்சிகோவில் உலகக் கோப்பைக்காக 40 நாள் பள்ளி விடுமுறை திட்டம் ரத்து!



மெக்சிகோ சிட்டி, மே. 11–

அமெரிக்கா மற்றும் மெக்சிகோவில் வருகிற ஜூன் 11–ந்தேதி தொடங்கி ஜூலை 19–ந்தேதி வரை பிபா உலகக்கோப்பை கால்பந்து போட்டி நடக்கிறது. மெக்சிகோவில் மொத்தம் 13 போட் டிகள் நடைபெற உள்ளன. உலகக்கோப்பை கால்பந்து போட்டிக்காகப் பள்ளி விடுமுறையை 40 நாட்கள் முன்கூட்டியே அறிவிக்க மெக்சிகோ பள்ளி கல்வித்துறை திட்டமிட்டது.

அதன்படி கல்வி அமைச்சகம் வருகிற 5–ந்தேதி மூடத் திட்டமிட்டது.

அதாவது வழக்கமாக ஜூலை 15–ந்தேதி விடப்படும் கோடைவிடுமுறை கிட்டத்தட்ட 40 நாட்கள் கூடுதலாகவும் ஆகஸ்டு மாத இறுதியில் வழக்கம்போல பள்ளிகள் திறக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.



# விஷ யோகம்: ஜாதகத்தில் அதன் தாக்கம் மற்றும் பரிகாரங்கள்!



சில யோகங்கள் ஒருவரை மேம்படுத்தும். வாழ்க்கையில் சாதகமற்ற சூழலை கொண்டு வரும். அந்த விதத்தில் சந்திரன் மற்றும் சனி அமைப்பு காரணமாக ஏற்படக்கூடிய விஷ யோகம் ஒருவரின் ஜாதகத்தில் இருப்பின் அவருக்கு தன்னுடைய வேலைகள் போராட்டங்கள் நிறைந்ததாகவும், குடும்ப வாழ்க்கையில் கடினமான சூழ்நிலையை சந்திக்க கூடியதாக இருக்கும். இந்த யோகம் உள்ளவர்கள் இதில் கவனமாக இருக்க வேண்டும், அதற்கான பரிகாரங்கள் என்னென்ன தெரிந்து கொள்வோம்.

**விஷ யோகம் எப்படி உருவாகிறது?**

* ஒருவரின் ஜாதகத்தில் சனி மற்றும் சந்திரன் ஒரே வீட்டில் சஞ்சரிக்கும்போது

* சந்திரன் – சனி சமா சப்தம பார்வையில் அதாவது இந்த கிரகங்கள் ஒன்றுக்கொன்று ஏழாம் இடத்தில் நேருக்கு நேராக இருக்கும்போது.

* அதேபோல சனி கடகத்திலும், சந்திரன் சனியின் வீடான மகரம் அல்லது கும்பத்தில் இருப்பின் பரிவர்த்தனை யோகமாக அமைகிறது.

* அதேபோல ஒருவர் ஏழரை சனி உச்சத்தில் நடக்கும் ராசியில் பிறக்கும் போது அவர் விஷ யோகத்தால் பாதிக்கப்படுவார்கள் என்று சில நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

* அதேபோல சனியின் 3–ஆம் மற்றும் 10–ஆம் பார்வைகள் சந்திரன் மீது இருப்பது லேசான விஷயங்கள் வடிவத்தை உருவாக்குகின்றன.

* அதன் தாக்கம் எப்படி இருக்கும், அதற்கான சில பரிகாரங்கள் என்ன என அறிந்துகொள்வோம்.

**விஷ யோகத்தின் விளைவுகள்:**

ஒருவரின் ஜாதகத்தில் சந்திரன் வலிமையாகவும், சனி பலவீனமாகவும் இருப்பின் அவருடைய ஜாதகத்திற்கு, ‘விஷ யோகத்தின்’ தாக்கம் குறைவாக இருக்கும்.

விஷ யோகம் கொண்ட ஜாதகர், தன்னுடைய வாழ்க்கையில் திருப்தி அற்ற மன நிலையில் இருப்பார். எந்த நேரமும் எதிர்மறையான எண்ணங்கள் அவர் மனதில் தோன்றும். இது அவரை நேர்மறையாக சிந்திக்கவும், செயல்படவும் விடாது.

இத்தகைய நபர்கள் தங்களுடைய நேரத்தின் பெரிய பகுதியே கடின சூழலை சமாதிக்கவும், தங்கள் எதிரியை பற்றிய தேவையற்ற பயம் அல்லது அவர்கள் மூலம் சில தீங்குகள் அனுபவிக்க நேரிடும் என்ற சிந்தனையிலேயே இருப்பார்கள்.

நல்ல விஷயங்களை சிந்திக்க இயலாத மனநிலையுடன் இருப்பார்கள்.

**விஷ யோக பலன் குறைவதற்கான பரிகாரங்கள்:**

* சந்திரனின் அருளை அதிகமாக பெற பால், அரிசி, தயிர் போன்ற பொருட்களை சந்திர பகவானுக்கு படைத்து வழிபட்டு, அதை தானமாக அளிப்பது நல்லது. இதை திங்கள் அல்லது வெள்ளிக்கிழமைகளில் தானமாக வழங்கலாம்.

* சனியின் மோசமான தாக்கத்தை சுகமாக மாற்ற, சனி பகவானுக்குரிய பொருட்களை தானமாக கொடுத்தது நல்ல பலனை தரும். சனி பகவானுக்கு உரிய பொருட்களையும் வைத்து சமைத்த உணவை தானமாக வழங்கவும்.

* தேவைப்படுபவர்களுக்கும், முதியோர்களுக்கும் புதிய காலனிகளை வழங்கலாம்.

விஷ யோக பலன் குறைவதற்கான பரிகாரங்கள்:

திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில் ‘சிவ சாலிசா’வை பாராயணம் செய்யலாம்.


அரச மரத்தடியில் உள்ள விநாயகரை வழிபட்டு விளக்கேற்றி வழிபாடு செய்யலாம்.

திங்கட் கிழமைகளில் விரதம் இருந்து சந்திர தரிசனத்தை செய்வதால் உங்களுடைய ஜாதகத்தில் சந்திரன் பலம் அடையும்.

அரச மரத்தின் அடியில் விளக்கேற்றும் வழக்கத்தைத் தொடங்குங்கள்.

நீங்கள் விரும்பினால், திங்கட்கிழமைகளில் விரதமும் மேற்கொள்ளலாம். இதுவும் சந்திரனின் பலத்தை அதிகரிக்கும்.

# வரலாற்றில் முதல்முறை.. ஒரே வரிசையில் திமுக, அதிமுக எம்.எல்.ஏ.க்கள்!



சென்னை, மே. 11–

சட்டசபையில் இதுவரை கண்டிராத வித்தியாசமான நிகழ்வு அரங்கேறி இருக்கிறது. அதாவது, தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் எதிர்க்கட்சி வரிசையில் திமுக மற்றும் அதிமுக உறுப்பினர்கள் அருகருகே அமர்ந்துள்ளனர். திமுக, 1967ம் ஆண்டிலும், அதிமுக 1977ம் ஆண்டிலும் ஆட்சிக்கு வந்த நிலையில், அன்றில் இருந்து இரு கட்சிகளே தமிழகத்தை மாறி மாறி ஆட்சி புரிந்து வந்தனர்.

தற்போது தனிப்பெரும் கட்சியாக உருவாகி ஆட்சியை பிடித்துள்ளதால், திமுக, அதிமுக எம்.எல்.ஏ.க்கள் எதிர்க்கட்சி வரிசையில் உள்ளன. அதேபோல், அதிமுக 2வது முறையாக எதிர்க்கட்சி வரிசையில் அமர்வதும் இதுவே முதல்முறை.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இந்தியர்களுக்கான 7 முடி பராமரிப்புக்கான வழிமுறைகள்!



இந்தியப் பெண்களுக்கு அவர்களின் தலைமுடிதான் அழகின் அடையாளமாகக் கருதப்படுகிறது. எனவே எல்லா பெண்களும் அவர்களது முடியை ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் பராமரிக்க ஆர்வம் காட்டுகின்றனர். இருப்பினும் மாசுபாடு, வாழ்க்கைமுறை மாற்றங்கள் மற்றும் முறையற்ற கவனிப்பு காரணங்களால், முடிப் பராமரிப்பு சவாலாக இருக்கிறது. எனவே இப்பதிவில் இந்தியர்கள் தங்களின் முடியை எப்படி பராமரிக்க வேண்டும் என்பதற்கான 7 வழிமுறைகள் பற்றி தெரிந்து கொள்ளலாம்.

1. உங்கள் முடிவகையைப் புரிந்து கொள்ளுங்கள்: உங்களது முடியை முறையாகப் பராமரிப்பதற்கு முதலில் உங்கள் முடியின் வகையைப் புரிந்து கொள்வது அவசியம். இந்தியர்களின் முடி பொதுவாகவே நேராக, அலை அலையாக மற்றும் சுருள் போன்ற வகைகளில் இருக்கும். ஒவ்வொரு முடி வகைக்கும் குறிப்பிட்ட தேவைகளும், பராமரிப்பு நடவடிக்கைகளும் உள்ளது. எனவே உங்களது முடிவகையை முதலில் தெரிந்து கொள்ளுங்கள்..

2. உள்ளிருந்து ஊட்டமளிக்கவும்: ஆரோக்கியமான முடி என்பது நமது உடலில் உள்ள ஊட்டச்சத்துக்களில் இருந்து தொடங்குகிறது. புரதம் விட்டமின்கள் மற்றும் தாதுக்கள் போன்ற அத்தியாவசிய ஊட்டச்சத்துக்கள் நிறைந்த ஒரு சீரான உணவை நீங்கள் பெறுவது மூலமாக, ஆரோக்கியமான கூந்தலை நீங்கள் பெற முடியும். முடி வளர்ச்சி மற்றும் ஒட்டுமொத்த முடி ஆரோக்கியத்தை மேம்படுத்த பழங்கள், கீரைகள், விதைகள் மற்றும் லீன் புரதங்கள் போன்றவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

3. சரியான முடி பராமரிப்பு பொருட்களைத் தேர்ந்தெடுங்கள்: முடியை ஆரோக்கியமாக வைத்திருக்க ஏதோ ஒரு ப்ராடக்ட் பயன்படுத்துவோம் என்றில்லாமல், உங்கள் முடிக்கு ஏற்ற தரமான பராமரிப்பு பொருட்களில் முதலீடு செய்யுங்கள். குறிப்பாக ஷாம்பூ மற்றும் கண்டிஷனர்களைத் தேர்வு செய்யும்போது அதிகப்படியான சல்பேட் இல்லாமல் பார்த்து வாங்குங்கள்.

4. எண்ணெய் மசாஜ்: பாரம்பரிய முடி பராமரிப்பு நடைமுறைகளில் எண்ணெய் மசாஜ் முக்கிய அங்கம் வகிக்கிறது. இதற்கு தேங்காய், பாதாம் மற்றும் ஆமணக்கு எண்ணெய்களைப் பயன்படுத்தலாம். உச்சந்தலையில் எண்ணெய் தேய்த்து மசாஜ் செய்வது மூலமாக, ரத்த ஓட்டம் அதிகரிக்கிறது. இதனால் மயிர்க் கால்களுக்கு ஊட்டம் கிடைத்து முடி வளர்ச்சியைத் தூண்டுகிறது.

5. மாசுக்களில் இருந்து தலைமுடியை பாதுகாக்கவும்: பொதுவாகவே இந்தியாவின் பல நகரங்கள் காற்று மாசுபாட்டுக்கு பெயர் போனவை. இது உங்கள் தலைமுடியை சேதப்படுத்தும். எனவே வெளியே செல்லும்போது தலையில் தாவணி அல்லது தொப்பி பயன்படுத்தி பாதுகாப்பாக மூடவும்.

6. இயற்கை முறையைப் பின்பற்றுங்கள்: இந்தியாவில் தலைமுறைக்கு ஊட்டம் கொடுக்கும் இயற்கை பொருட்கள் அதிகம் உள்ளது. நெல்லிக்காய், மருதாணி, சீகைக்காய் மற்றும் வெந்தய விதைகள் போன்றவற்றை தலைமுடிக்கு பயன்படுத்துவதால், இயற்கையாகவே தலைமுடி வலுபெறும். இவற்றைப் பயன்படுத்தி உங்கள் தலைமுடிக்கான மாஸ்கையும் வீட்டிலேயே தயாரித்து உபயோகிப்பது நல்லது.

7. அவ்வப்போது ட்ரிம் செய்யவும்: உங்கள் தலைமுடியை அவ்வப்போது ட்ரிம் செய்வதால் பிளவு பட்ட முனைகள் அகற்றப்படுகிறது. இதனால் முடி பாதிக்கப்படுவது தடுக்கப்படுகிறது. இது மேற்கொண்ட சேதத்தைத் தடுத்து தலை முடியை ஆரோக்கியமாகவும் அதன் அழகைப் பராமரிக்கவும் உதவுகிறது. எனவே மூன்று மாதத்திற்கு ஒருமுறையாவது நல்ல சிகையலங்கார நிபுணரை அணுகி முடியை ட்ரிம் செய்து கொள்ளுங்கள்.

# சோப்பு முதல் பிஸ்கட் வரை.. விலை மீண்டும் உயர வாய்ப்பு..!



புதுடெல்லி, மே. 11–

அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்தப்படும் சோப்பு, சலவைத்தூள், பிஸ்கட், பானங்கள் மற்றும் பொட்டலப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் உள்ளிட்ட வேகமாக விற்பனையாகும் நுகர்வோர் பொருட்கள் (FMCG) விலைகள் மீண்டும் உயரக்கூடும் என்ற தகவல் வெளியாகியுள்ளது. உற்பத்திச் செலவுகள் தொடர்ந்து அதிகரித்து வருவதால், முன்னணி FMCG நிறுவனங்கள் விலை உயர்வை பரிசீலித்து வருவதாக தொழில்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

மூலப்பொருட்களின் விலை உயர்வு, போக்குவரத்து செலவுகள் அதிகரிப்பு மற்றும் விநியோகச் சங்கிலியில் ஏற்பட்டுள்ள தடைகள் ஆகியவை நிறுவனங்களின் லாப வரம்புகளில் கடுமையான அழுத்தத்தை ஏற்படுத்தி வருகின்றன. இதன் விளைவாக, பல நிறுவனங்கள் ஏற்கனவே சில பொருட்களின் விலையை 3 முதல் 5 சதவீதம் வரை உயர்த்தியுள்ளன என தகவல்கள் கூறுகின்றன.

தொழில்துறை நிபுணர்கள் கூறுவதாவது, தற்போதைய செலவு அழுத்தம் தொடர்ந்தால் வரும் மாதங்களில் மேலும் விலை உயர்வுகள் நடைமுறைக்கு வரலாம். இருப்பினும், இந்த உயர்வுகள் திடீரென அல்லாமல் படிப்படியாகவே செயல்படுத்தப்படும் என நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

மத்திய கிழக்கு பகுதிகளில் நிலவும் அரசியல் பதற்றம் காரணமாக உலகளாவிய விநியோகச் சங்கிலிகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் மூலப்பொருட்கள், பேக்கேஜிங் மற்றும் லாஜிஸ்டிக்ஸ் செலவுகள் அதிகரித்துள்ளன. அதே நேரத்தில் இந்திய ரூபாய் மதிப்பு சரிவு ஏற்பட்டிருப்பதும் நிறுவனங்களுக்கு கூடுதல் அழுத்தத்தைஏற்படுத்தியுள்ளது.

நிறுவனங்கள் எடுக்கும் நடவடிக்கைகள்: விலை உயர்வை கட்டுப்படுத்தவும், லாபத்தை பாதுகாக்கவும் FMCG நிறுவனங்கள் பல்வேறு உத்திகளை பின்பற்றுகின்றன. அவற்றில் முக்கியமானவை:

* பேக்கில் உள்ள பொருட்களின் அளவை குறைத்து விலை மாற்றாமல் வைத்தல்
* அத்தியாவசியமற்ற விளம்பர செலவுகளை குறைத்தல்
* விநியோகச் சங்கிலியை மேம்படுத்துதல்
* உற்பத்தி மற்றும் சேமிப்பு செலவுகளை கட்டுப்படுத்துதல்

சில நிறுவனங்கள் ரூ.5, ரூ.10, ரூ.15 போன்ற நிலையான விலைகளை மாற்றாமல் வைத்துக்கொண்டு, உள்ளே உள்ள பொருளின் அளவை குறைக்கும் நடைமுறையையும் பயன்படுத்தி வருகின்றன.

முக்கிய நிறுவனங்களின் நிலை: டாபர் இந்தியா நிறுவனம் இந்த நிதியாண்டில் சுமார் 10 சதவீத பணவீக்க அழுத்தத்தை எதிர்கொண்டுள்ளதாக தெரிவித்துள்ளது. இதனை சமாளிக்க பல பிரிவுகளில் சராசரியாக 4 சதவீதம் வரை விலை உயர்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டுள்ளது.

பிரிட்டானியா நிறுவனம் எரிபொருள் மற்றும் பேக்கேஜிங் செலவுகள் சுமார் 20 சதவீதம் வரை அதிகரித்துள்ளதாக கூறி, விலை உயர்வு அல்லது பொருள் அளவு குறைப்பு ஆகிய இரு விருப்பங்களையும் பரிசீலித்து வருகிறது.

அதேபோல், ஹிந்துஸ்தான் யூனிலீவர் (HUL) நிறுவனம் கச்சாப் பொருட்களின் விலை அழுத்தம் தொடர்ந்தால் மேலும் விலை உயர்வுகள் மேற்கொள்ள வேண்டிய நிலை ஏற்படலாம் என எச்சரித்துள்ளது. இந்நிறுவனம் சர்ஃப் எக்ஸெல், லைஃப்பாய், டோவ், புரூக் பாண்ட் உள்ளிட்ட பிரபல பிராண்டுகளை வைத்துள்ளது.

பொதுமக்களுக்கு தாக்கம்: இந்த விலை உயர்வு நடவடிக்கைகள் நடைமுறைக்கு வந்தால், அன்றாட குடும்ப செலவுகள் மேலும் அதிகரிக்கும் நிலை உருவாகும் என பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர். குறிப்பாக நடுத்தர மற்றும் குறைந்த வருமானக் குடும்பங்களுக்கு இது கூடுதல் சுமையாக மாறக்கூடும்.

# வேலை வாய்ப்பு

## சிஎஸ்ஐஆர்–கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையம் (SERC), சென்னை, 93 வேலைவாய்ப்புகள்!




நிறுவனத்தின் பெயர்: சிஎஸ்ஐஆர்–கட்டமைப்புப் பொறியியல் ஆராய்ச்சி மையம் (எஸ்இஆர்சி), சென்னை

அறிவிப்பு எண்: எஸ்இ–2/2026

பணி வகை: மத்திய அரசுப் பணிகள்

வேலைவாய்ப்பு வகை: ஒப்பந்த அடிப்படையில்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 64 திட்ட உதவியாளர்–II மற்றும் திட்ட இணை I/II பணியிடங்கள்

மொத்த காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை: 29 டிரேட் (ஐடிஐ) அப்ரண்டிஸ், டெக்னீஷியன் (டிப்ளமோ) அப்ரண்டிஸ் பணியிடங்கள்

பணியிடத்தில்: சென்னை

தொடங்கும் தேதி: 08.05.2026

கடைசி தேதி: 21.05.2026 / கடைசி தேதி: 20.05.2026

அப்ரண்டிஸ் பயிற்சி; நேர்காணல் நேரம்: 20.05.2026

விண்ணப்பிக்கும் முறை: ஆன்லைன்

அதிகாரப்பூர்வ இணையதளம்: https://serc.res.in/

# சோழவந்தான் ஜெனகை மாரியம்மன் கோவிலில் தவெக தலைவர் விஜய் முதலமைச்சர் ஆக பதவி ஏற்றதை முன்னிட்டுசிறப்பு அர்ச்சனை செய்து இனிப்பு வழங்கி கொண்டாடிய நிர்வாகிகள்



சோழவந்தான், மே. 11–

மதுரை மாவட்டம் சோழவந்தானில் 2026 சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று தமிழ்நாடு முதலமைச்சராக விஜய் பதவி ஏற்றத்தை தொடர்ந்து அருள்மிகு ஸ்ரீ ஜெனகை மாரியம்மன் கோவிலில் சிறப்பு அர்ச்சனை செய்து வழிபாடு மேற்கொள்ளப்பட்டது கோவில் முன்பாக இனிப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து வட்ட பிள்ளையார் கோவில், முதலியார் கோட்டை பேட்டை உள்ளிட்ட பகுதிகளில் வெடி வெடித்தும் இனிப்பு வழங்கியும் தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் கொண்டாடினர். மதுரை மாவட்ட செயலாளர்கள் கல்லாணை விஷால் கிருஷ்ணா ஆகியோர் ஆலோசனையின் பேரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேட்டை கல்லாணை, ராமநாதன் முத்துப்பாண்டி சப்பானி கார்த்தி சரவணன் பெரிய சாமி டிராக்டர் சரவணன் குருசாமி இளவரசன் பிருத்தி விராஜ் மற்றும் நிர்வாகிகள் தமிழக வெற்றிக்கழக தொண்டர்கள் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அறிக்கை!



முதலமைச்சர் பதவி ஏற்பு விழாவில் பண்பாட்டுப் படையெடுப்பின் தொடக்கமா?

தமிழ்நாடு அரசின் புதிய முதலமைச்சருக்கு நமது சுட்டிக்காட்டல்!

மாண்புமிகு முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் அவர்களது பதவியேற்பு விழாவில், இதற்கு முன் எப்போதும் நடந்திராத “திடீர் மாற்றம்” விழாவின் தொடக்கத்திலேயே நடைபெற்றதோடு, விழா முடிவிலும் அதைக் காண முடிந்தது. தமிழ்நாட்டின்மீது மீண்டும் ஹிந்தி, சமஸ்கிருத ஆர்.எஸ்.எஸ். கொள்கைப் பண்பாட்டின் ஆதிக்கம் தொடங்கி உள்ளது.

நமது கண்டனத்தைப் பதிவு செய்யவேண்டிய அவசியம்!

தமிழ்நாட்டின் புதிய அரசுக்கு, குறிப்பாக முதலமைச்சர் மாண்புமிகு ஜோசப் விஜய் அவர்களுக்கு சுட்டிக்காட்டி (அதுவும் பதவியேற்ற அன்றே) நமது கண்டனத்தைப் பதிவு செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

‘வந்தே மாதரம்’ பாடல் சமஸ்கிருத, ஹிந்தி மொழிப் படையெடுப்பின் படையெடுப்பு ஆகும். (சமஸ்கிருத மயப்படுத்தப்பட்ட பாட்டு)

அதைவிட, ‘வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவ தைப்போல’, நம் மொழி செம்மொழித் தமிழ் வாழ்த்தாம் “நீராரும் கடலுடுத்த’’ பாடல் மூன்றாவது இடத்திற்குத் தள்ளப்பட்டதைப் பார்த்து, தமிழ் உணர்வாளர்களின் நெஞ்சம் கொதிக்கிறது! இதுபோன்ற அவலங்கள் மீண்டும் தொடராது இருக்க வழிவகை காணவேண்டும்!

‘‘மரபுகள் மாற்றப்பட்டதுதானா இவர்களால் சொல்லப்பட்ட மாற்றம்?’’ என்ற கேள்வி, தமிழ்நாடெங்கும் ஒலிக்கத் தொடங்கிவிட்டது. இது எப்படி? ஏன்? ஏற்பட்டது என்பதை முதலமைச்சர் ஓர் அவசர விசாரணை நடத்தி, அதுபோன்ற அவலங்கள் மீண்டும் தொடராது இருக்க வழிவகை காணவேண்டும்!

கவனச்சிதறல் இன்றி செயல்படவேண்டும்!

விழா ஏற்பாட்டாளர்கள் யார்? ‘லோக் பவன்’ என்ற ஆளுநர் மாளிகையா? அல்லது தமிழ்நாடு அரசின் பொதுத் துறையா? (Public Department?) என்பதை விசாரித்து, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ தமிழ்நாட்டு மக்களின் உணர்வுக்கு எதிரான இத்தகைய பண்பாட்டு படையெடுப்பு மீண்டும் அரசு நிகழ்ச்சிகளில் ஏற்படாது கவனச்சிதறல் இன்றி செயல்பட வேண்டும்.

## விஜய் தலைமையிலான சட்டமன்றத்தில்

# எம்.எல்.ஏக்களின் சராசரி வயது 56-லிருந்து 51-ஆக குறைவு!



சென்னை, மே. 11–

தமிழ்நாட்டில் தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் தலைமையில் நேற்று கூட்டணி அரசு பதவியேற்றது. இந்த தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் இன்று சட்டசபையில் எம்.எல்.ஏ.வாக பதவியேற்றனர்.

இந்த நிலையில் முதல்–அமைச்சர் விஜய் தலைமையிலான தமிழ்நாடு சட்டமன்றத்தில் எம்.எல்.ஏக்களின் சராசரி வயது 56–லிருந்து 51–ஆக குறைந்துள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. அதன்படி சட்டமன்றத்தில்,

25–30 வயதிற்குள் உள்ள எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை – 7

31–40 வயதிற்குள் உள்ள எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை – 42

41–70 வயதிற்குள் உள்ள எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை – 166

71–80 வயதிற்குள் உள்ள எம்.எல்.ஏக்களின் எண்ணிக்கை – 19

மேலும் தமிழக சட்டமன்றத்தில் 23 பெண் எம்.எல்.ஏக்கள் இடம்பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


# அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு பரிசும், பாராட்டும்!



மதுரை, மே. 11–

வெளியான 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் மதுரைக் கல்லூரி மேல்நிலைப் பள்ளியில் (எம்சி மேல்நிலைப் பள்ளி) முதன்மை மதிப்பெண் பெற்ற மாணவர் கே. கிஷோர் மற்றும் இரண்டாம் மதிப்பெண் பெற்ற மாணவர் எம். சுல்தான் ரகீம் இருவருக்கும் பள்ளி வளாகத்தில் கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றத் தலைவர் மனிதத்தேனீ ரா.சொக்க லிங்கம் சால்வை அணிவித்து, கல்வி ஊக்கத்தொகை வழங்கி, பரிசும் கொடுத்துப் பாராட்டினார். மதுரைக் கல்லூரி வாரியக் குழு உறுப்பினர் தாம்பிராஸ் இல. அமுதன் தலைமையில் நடைபெற்றது. பள்ளித் தலைமை ஆசிரியர் பி. பாலாஜிராம், உதவித் தலைமை ஆசிரியர்கள் என். வெங்கடசுப்பிரமணியன், பி.மகேஸ்வரன் முன்னிலை வகித்தனர். இரண்டு மாணவர்களின் பெற்றோர்கள் பங்கேற்றனர்.

வாழிய பேராற்றல் வாழியவே. பள்ளித் தாளாளர் மூத்த வழக்கறிஞர் எஸ். பார்த்தசாரதி என்பது கூடுதல் சிறப்பு. கல்வியால் மேலும் உயர்நிலை பெற்றிட வாழ்த்தும் பாராட்டும்.

# உட்கட்சி பூசல் எதிரொலி: எஸ்.பி.வேலுமணி பதவியேற்றபோது மேஜையை தட்டி உற்சாகமாக வரவேற்ற அதிமுக எம்.எல்.ஏக்கள்!



சென்னை, மே. 11–

17–வது சட்டப்பேரவையின் முதல் நாளான இன்று, அனைத்து உறுப்பினர்களும் எம்.எல்.ஏ.க்களாக பதவியேற்று வருகின்றனர்.

இன்றைய கூட்டத்துக்கு எடப்பாடி பழனிசாமி தலைமையில் சில எம்.எல்.ஏ.க்கள் சட்டசபைக்கு வந்த நிலையில்,

எடப்பாடி வருகை தந்த பிறகு எஸ்.பி.வேலுமணி தலைமையில் அதிமுக எம்.எல்.ஏ.க்கள் ஒரு குழுவினராக சட்டப்பேரவைக்கு வருகை தந்தனர்

மேலும், எடப்பாடி பழனிசாமி எம்.எல்.ஏ.வாக பதவியேற்கும் போது சிலர் மட்டுமே மேஜையைத் தட்டி வரவேற்றனர். எஸ்.பி. வேலுமணிக்கு அதிமுகவின் பெரும்பாலான எம்.எல்.ஏ.க்கள் மேஜையை தட்டி வரவேற்றனர். இதில் இருந்தே உட்கட்சி பூசல் சட்டசபைக்குள்ளே வெடித்துள்ளதாக கூறப்படுகிறது.

இதனிடையே, அதிமுக முன்னாள் அமைச்சர் சி.வி. சண்முகம் பேரவைக்கு வந்தும், எம்.எல்.ஏ.வாக பதவியேற்காமல் தற்போது ஆர்.ஏ.புரத்தில் உள்ள தனது வீட்டுக்கு புறப்பட்டு சென்றார்.



திருப்பூர் தெற்கு சட்டமன்ற தொகுதி மண்ணரை பேருந்து நிலையத்தில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் தங்களது வெற்றியை கொண்டாடும் விதத்தில் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினார்கள் விழாவின் தலைமை 34 வது வார்டு செயலாளர் பாலமுருகன். பகுதி செயலாளர் யுவராஜ் முன்னிலை வகித்தார் இதில் நிர்வாகிகள் யுவராஜ். சாமிநாதன்.செந்தில்குமார். மணிகண்டன். ஜெயக்குமார்.சுதன். கணேஷ். நிவாஸ். இளங்கோ.கார்த்திக். மோகன் குமார்.சுரேந்தர் மகேந்திரன். பழனிச்சாமி. மற்றும் மகளிர் அணியினர் ஊர் பொதுமக்கள் பங்கேற்றனர்.




# பாரசீக வளைகுடாப் பதற்றத்தைத் தீர்க்கும் முயற்சி பின்னடைவு..டிரம்ப் அதிரடி..!

அமெரிக்கா, மே. 11–

பாரசீக வளைகுடாவில் நிலவும் மோதலை முடிவுக்குக் கொண்டுவரும் நோக்கில் அமெரிக்கா முன்வைத்த சமீபத்திய




முன்மொழிவுக்கு, ஈரான் ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தான் மத்தியஸ்தர்களைப் பயன்படுத்தி தனது செய்தியைத் தெரிவித்தது.

இருப்பினும், அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப், தெஹ்ரானின் பதிலை "முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது!" என்று சமூக ஊடகப் பதிவு ஒன்றில் உடனடியாக நிராகரித்தார். இது, உலகளாவிய கப்பல் போக்குவரத்தைப் பாதித்து, எரிசக்தி விலைகளை உயர்த்தியுள்ள பதட்டங்களைத் தணிப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளுக்கு மற்றுமொரு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்திய அமெரிக்க முன்மொழிவு, மோதலை முடிவுக்குக் கொண்டுவரவும், முக்கியமான ஹோர்முஸ் ஜலசந்தி கப்பல் போக்குவரத்துப் பாதையை மீண்டும் திறக்கவும், ஈரானின் அணுசக்தி நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவும் முயன்றதாகக் கூறப்படுகிறது. ஈரானின் பதில் ஏன் நிராகரிக்கப்பட்டது என்பது குறித்து டிரம்ப் விரிவாகக் கூறவில்லை.

முன்னதாக ஒரு பதிவில், கிட்டத்தட்ட ஐந்து தசாப்தங்களாக தெஹ்ரான் அமெரிக்காவுடன் "விளையாட்டு விளையாடுவதாக" அவர் குற்றம் சாட்டினார், மேலும் "அவர்கள் இனி சிரிக்க மாட்டார்கள்!" என்று எச்சரித்தார்.

ஐக்கிய நாடுகள் சபைக்கான அமெரிக்கத் தூதர் மைக் வால்ட்ஸ், ஏபிசி உடனான ஒரு நேர்காணலில், "மீண்டும் போர் நடவடிக்கைகளுக்குத் திரும்புவதற்கு முன்பு, எங்களால் முடிந்த ஒவ்வொரு வாய்ப்பையும் வாஷிங்டன் இன்னும் ராஜதந்திரத்திற்கு வழங்கி வருகிறது" என்று கூறினார்.

இதற்கிடையில், மோதல் தொடங்கியதிலிருந்து பொதுவெளியில் தோன்றாத ஈரானின் புதிய உச்ச தலைவர் மொஜ்தபா கமேனி, ஈரானின் கூட்டு இராணுவத் தலைமையகத்தின் தலைவரைச் சந்தித்து, நடவடிக்கைகளைத் தொடரவும் எதிரிகளை எதிர்கொள்ளவும் "புதிய மற்றும் தீர்க்கமான உத்தரவுகளை" பிறப்பித்ததாக அரசு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

# குவைத், கத்தார், ஐக்கிய அரபு அமீரகம் மீது டிரோன் தாக்குதல்; சவுதி அரேபியா கண்டனம்!

ரியாத்,மே. 11–



குவைத், கத்தார் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் நாடுகளின் நிலப்பகுதிகள், வான்வெளி மற்றும் கடல்வழி பகுதிகள் மீது டிரோன்களை கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டு உள்ளது. இது தீங்கு விளைவிக்க கூடியது என்று சவுதி அரேபியா கண்டனம் வெளியிட்டு உள்ளது. இதுபற்றி அந்நாட்டின் வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்டு உள்ள அறிக்கை யில், ஐக்கிய அரபு அமீரகம், குவைத் மற்றும் கத்தார் நாடுகள் மீது நடந்த டிரோன் தாக்குதலுக்கு சவுதி அரேபிய அரசு கடும் கண்டனம் தெரிவிக்கிறது. வளைகுடா நாடுகளின் பாதுகாப்பு மற்றும் நிலைத்த ன்மையை பாதுகாப்பதற்காக எடுக்கப்படும் அனைத்து நடவடிக்கைகளுக்கும் எங்களு டைய அரசு ஆதரவளிக்கிறது என தெரிவித்து உள்ளது.

குவைத் மீது நடந்த டிரோன் தாக்குதலுக்கு, கத்தார் அரசும் கண்டனம் தெரிவித்து உள்ளது. குவைத்தின் இறையா ண்மை மற்றும் சர்வதேச சட்ட விதிமீறலாகும் என குறிப்பிட்டு உள்ளது. குவைத் நாட்டின் வான்வெளி மீது நேற்று காலை டிரோன் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதற்கு ஐக்கிய அரபு அமீரகத்தின் வெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட கண்டன செய்தியில், குவைத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மைக்கு அச்சுறுத்தலாக இருப்பதுடன், இந்த பயங்கரவாத தாக்குதல்கள் குவைத்தின் இறையாண்மையை மீறும் செயலாகும் என்றும் தெரிவித்தது. இதனை ஈரான் நடத்தியிருக்க கூடும் என அந்நாடுகள் தெரிவித்து உள்ளன என டைம்ஸ் ஆப் இஸ்ரேல் செய்தி நிறுவனம் தெரிவித்து உள்ளது.

# முதல்-அமைச்சர் விஜய்க்கு கால அவகாசம் கொடுக்க வேண்டும் - பிரேமலதா பேட்டி!



சென்னை, மே. 11–

சட்டசபை வளாகத்தில் பிரேமலதா செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது;

"சட்டமன்ற உறுப்பினராக பதவியேற்றுள்ளேன். என்னை வெற்றிபெற வைத்த விருத்தாச்சலம் தொகுதி மக்களுக்கும், கூட்டணி கட்சிதலைவர் ஸ்டாலினுக்கும், அனைவருக்கும் நன்றிகள். இந்த வெற்றியை கேப்டன் விஜயகாந்துக்கு உரித்தாக்குகிறேன். விருத்தாச்சலம் தொகுதி மக்களுக்கு கொடுத்த வாக்குகளை நிறைவேற்றுவேன். முதல்–அமைச்சராக பதவியேற்றுள்ள விஜய்க்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன். விஜய்க்கு கட்டாயம் நேரம் கொடுக்க வேண்டும். அவருக்கு உரிய அவகாசம் கொடுப்போம். அதன் பிறகு மக்கள் பிரச்சினை களையும், தமிழகத்தின் உரிமைகளையும் சட்டசபையில் பேசுவோம். " இவ்வாறு அவர் கூறினார்.

# முதலமைச்சர் விஜய்க்கு z+ பாதுகாப்பு..!



சென்னை, மே. 11–

2026 சட்டமன்றத் தேர்தலில் சி. ஜோசப் விஜய் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றுள்ளார் மற்றும் அவருக்கு உயர்மட்டப் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. முன்னதாக Y பிரிவு பாதுகாப்பு வழங்கிய நிலையில் இன்றிலிருந்து Z+ பாதுகாப்பு மத்திய அரசால் வழங்கப்பட்டு ள்ளது. இதில் 55மத்திய பாதுகாப்பு படை வீரர்கள் 24 மணி நேரமும் முதலமைச்சருக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. Z+ பாதுகாப்பு என்பது இந்தியாவில் வழங்கப்படும் மிக உயர்ந்த அளவிலான பாதுகாப்பாகும். இது பெரும்பாலும் முதலமைச்சர்கள், உயர்மட்ட அரசியல்வாதிகள் மற்றும் கடுமையான அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளும் முக்கியப் பிரமுகர்களுக்கு வழங்கப்படுகிறது.

இந்த அடுக்கில் பொதுவாக 55 வீரர்கள் இருப்பார்கள்; இதில் NSG–யின் உயரடுக்கு கமாண்டோக்கள் மற்றும் மாநில காவல்துறையினர் அடங்குவர். உதாரணமாக, குறிப்பிட்ட மாநிலத் தலைமைகளுக்காக 36 கமாண்டோக்கள், 2 காவல் கண்காணிப்பாளர்கள் (SP), 2 உதவி காவல் கண்காணிப்பாளர்கள் (ASP) மற்றும் 4 துணை காவல் கண்காணிப்பாளர்கள் (DSP) பணியில் ஈடுபடுத்தப்படுவார்கள். முதலமைச்சர் விஜய்க்கு புல்லட் பேரொபி கார்கள், பைலட் வாகனங்கள் மற்றும் 24x7 பாதுகாப்பும் இதில் அடங்கும். மேலும் முதலமைச்சர் விஜய் அவர்களுக்கு ஹெக்லர் & கோச் MP5 துணை இயந்திரத் துப்பாக்கிகள் நவீன ஆயுதங்கள் வழங்கப்படுகின்றன.

# தமிழ்நாட்டில் 16-ந்தேதி வரை மழைக்கு வாய்ப்பு!

சென்னை, மே. 11–

தமிழ்நாட்டில் கோடை காலம் வாட்டி வதைத்து வந்த சூழலில், தற்போது மழைக்கான சூழல் உருவாகி ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. இந்த மழையால் வெப்பம் குறைந்து சீதோஷ்ண நிலை தமிழ்நாட்டில் சற்று மாறியுள்ளது.

இந்த நிலையில் மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட் டிய இலங்கை பகுதிகளின் மேல் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை (செவ்வாய்க்கிழமை) குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது. மேலும் தெற்கு உள்கர்நாடகா மற்றும் தமிழகம் வழியாக வளிமண்டல காற்றழுத்த தாழ்வுப்பாதை நிலவுகிறது. இவை காரணமாக



தமிழ்நாட்டில் 16–ந்தேதி (சனிக்கிழமை) வரை மழைக்கு வாய்ப்பு இருக்கிறது.

அதன்படி (திங்கட்கிழமை) தமிழ்நாட்டில் சில இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் இடி மின்னலுடன் மிதமான மழையும், ராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் இடி மின்னல், பலத்த காற்றுடன் கனமழையும் பெய்யக்கூடும்.

மே. 12 (செவ்வாய்க்கிழமை) தமிழ்நாட்டில் ஒரிரு இடங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் மிதமான மழையும், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை மாவட்டங்கள் மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒரிரு இடங்களில் காற்று, இடி, மின்னலுடன் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளிடம் மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் பெற்றுக் கொண்டார்.

# தமிழ்நாடு அரசியல் உதயநிதி புதிய எதிர்க்கட்சித் தலைவர்: 100% ஆற்றல்மிகு எதிர்க்கட்சியாக இருப்போம் உறுதி!

சென்னை, மே. 11–

தமிழக முதலமைச்சராக தவெக தலைவர் விஜய் பதவியேற்றுக் கொண்டார். இந்நிலையில் திமுக சட்டமன்ற குழு தலைவராக



உதயநிதி ஸ்டாலின் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

துணை தலைவராக கே.என்.நேருவும், கொறடாவாக எ.வ.வேலுவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இதன்மூலம் உதயநிதி ஸ்டாலின் சட்ட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் ஆக உள்ளார்.

இந்நிலையில் உதயநிதி வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், " தமிழ்நாட்டின் புதிய அரசுக்கும் – முதலமைச்சராக பொறுப்பேற்றுள்ள திரு.விஜய் அவர்களுக்கும் என் வாழ்த்துகள்.

இந்த நேரத்தில், 17–ஆவது தமிழ்நாடு சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றும் பெரிய பொறுப்பை எனக்கு வழங்கியிருக்க கழகத்தலைவர் எங்க உயிரான மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழகப் பொதுச்செயலாளர் மற்றும் கழகச் சட்டமன்ற உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள், தலைவர் கலைஞரின் உடன்பிறப்புகள், எல்லாத்துக்கும் மேல தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் என்னோட அன்பான நன்றி!

கழகத்தலைவர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, சட்டமன்றத்திலும் – மக்கள் மன்றத்திலும் – சமூக ஊடகங்களிலும் ஆற்றல்மிகு எதிர்க்கட்சியா மக்களின் குரலை நாங்க எதிரொலிப்போம்.

ஆக்கப்பூர்வமான விமர்சனங்களை முன்வைப்போம். எங்க தலைவர் சொன்ன மாதிரி, எதிரிக்கட்சியா இல்லாம, ஒரு நல்ல எதிர்க்கட்சியா செயல்படுவோம். மக்களுக்கும் – அரசுக்கும் இடையிலான ஊடகமா நாங்க தான் இனி இருப்போம். என் மேல நம்பிக்கை வச்சு மக்கள் கொடுத்திருக்க இந்தப் பொறுப்புக்கு நான் 100% உண்மையா இருப்பேன். கடுமையாக உழைப்பேன்!" என்று தெரிவித்துள்ளார்.

# சரக்கு ரயிலுக்குள் சடலங்கள் மீட்பு; அமெரிக்கா - மெக்சிகோ எல்லையில் திடுக்!!

புதுடெல்லி, மே. 11–

டெக்சாஸின் லாரெடோவில் சரக்கு ரயிலில் இருந்து 6 பேர் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன. இது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அமெரிக்கா மற்றும் மெக்சிகோ இடையே தினமும் லட்சக்கணக்கான டன் சரக்குகள் ரயில்கள் மூலம் கடத்தப்படுகின்றன. மெக்சிகோ வழியாக அமெரிக்காவிற்குள் நுழைய முயற்சிக்கும் பலர், சரக்கு ரயில்களின் மேலேயோ அல்லது உள்ளேயோ ஆபத்தான முறையில் பயணம் செய்து வருகின்றனர். இதனால் அவ்வப்போது உயிரிழப்பு சம்பவங்களும் நிகழந்து வருகிறது.

இந்நிலையில் அமெரிக்கா மெக்சிகோ எல்லை அருகே டெக்சாஸின் லாரெடோவில் சரக்கு ரயில் பெட்டியில் இருந்து சடலங்கள்




கண்டெடுக்கப்பட்டன. இது குறித்து அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் பெரும்பாலும் கடுமையான வெப்பம், காற்றோட்டமின்மை மற்றும் ரயிலில் ஆபத்தான முறையில் ஏறி பயணம் செய்யும் போது ஏற்படும் விபத்துகளால் நடக்கின்றன என தகவல்கள் தெரிவிக்கின்றன. ரயிலுக்குள் 6 பேர் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதை போலீசார் உறுதி செய்தனர்.

ஆனால் உயிரிழந்தவர்கள் விவரங்களை வெளியிட மறுத்துவிட்டனர். இந்த சம்பவத்திற்கான காரணம், சடலங்கள் எவ்வளவு நேரம் ரயிலுக்குள் இருந்துள்ளது. சதி செயல் காரணமாக நிகழ்ந்ததா உள்ளிட்ட பல்வேறு கோணங்களில் விசாரணை நடந்து வருகிறது.

தெற்கு டெக்சாஸில் கடும் வெப்பம் நிலவி வரும் சூழலில், இந்த சம்பவம் அரங்கேறி உள்ளது. வெப்பத் தாக்கம் மரணங்களுக்குக் காரணமா என்பது குறித்தும் விசாரணை நடக்கிறது.

# மே 25, 26-ல் பாரத ஸ்டேட் வங்கி ஊழியர்கள் 'ஸ்டிரைக்' அறிவிப்பு!

மதுரை, மே. 11–




கோரிக்கைகளை வலியுறுத்தி மே 25, 26ல் நாடு தழுவிய வேலை நிறுத்தத்தை அகில இந்திய பாரத ஸ்டேட் வங்கி ஊழியர் கூட்டமைப்பு அறிவித்துள்ளது.

தொடர் விடுமுறையால் எஸ்.பி.ஐ., வங்கி சேவை நான்கு நாட்களுக்கு மேல் பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எஸ்.பி.ஐ., வங்கியில் காலிப்பணியிடங்களை நிரப்புதல், மனிதவள மேலாண்மை அமைப்பு பிரச்னைகளை சரிசெய்தல் உட்பட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மே 25, 26ல் வேலை நிறுத்தம் நடக்க உள்ளது. அதற்கு முன்னதாக எஸ்.பி.ஐ., வங்கி ஊழியர்கள் மே 5 முதல் அடையாள போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். (மே 11) மாவட்ட அலுவலகங்களில் மதிய உணவு இடைவேளையில் ஆர்ப்பாட்டம், மே 13 ல் அந்தந்த தொகுதி எம்.பி.,க்களிடம் மனு அளித்தல், சமூக ஊடகங்களில் பிரசாரம் உள்ளிட்டவற்றை மேற்கொள்ள தீர்மானித்துள்ளனர்.

எஸ்.பி.ஐ., வங்கி கூட்டமைப்பினர் கூறியதாவது: சமீப ஆண்டுகளில் எஸ்.பி.ஐ., வங்கியில் ஆட்சேர்ப்பு நட வடிக்கை எடுக்கப்பட வில்லை. இதனால் ஊழியர்களின் பணிச்சுமை பன்மடங்கு அதிகரித்துள்ளது. வங்கிகளில் துணை நிலை ஊழியர்கள், ஆயுதம் தாங்கிய காவலர்களை உடனே பணி நியமனம் செய்வது அவசியம். நிரந்த பணிகளில் 'அவுட்சோர்சிங்' மூலம் நியமனம் செய்வதை தவிர்க்க வேண்டும். ஊழியர்களின் பிரச்னைகள் தீர்க்கப்பட்டு, பணி உயர்வு திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். மனிதவள மேலாண்மை அமைப்பு (எச்.ஆர்.எம்.எஸ்) தொடர்பான பிரச்னைகளை உடனே சரிசெய்வது போன்ற கோரிக்கைகளை பல ஆண்டுகளாக சுட்டிக்காட்டியும் தீர்வும் கிடைக்கவில்லை.

இதனால் சேவையின் தரம் பாதித்து வாடிக்கையாளர்கள் பாதிக்கின்றனர். தேசிய ஓய்வூதிய திட்டத்தின் கீழ் அதிக நெகிழ்வுத்தன்மை, 2019க்கு பிறகு பணியில் சேர்ந்த ஊழியர்களுக்கு இடமாற்றக் கொள்கை அவசியம். மே 19ல் நிதி அமைச்சரிடமும், மே 21 ல் பிரதமரிடமும் மனுக்கள் அளிக்கவுள்ளோம். நேரடி வங்கி செயல்பாடுகள் முடங்கும் அபாயம் இருந்தாலும், 'டிஜிட்டல்' வங்கி சேவை தொடர்ந்து செயல்படும். இவ்வாறு கூறினர்.

வங்கி சேவை முடங்கும் வேலை நிறுத்தம் தொடங்கும் முன், மே 23 நான்காவது சனிக் கிழமை, மே 24 ஞாயிறு விடுமுறை நாள் என்பதால் தொடர்ச்சியாக 4 நாட்கள எஸ்.பி.ஐ., வங்கிகள் செயல்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மே 27ல் பக்ரீத் பண்டிகை வருவதால், வேலைநிறுத்தம் மேலும் தொடரும் வாய்ப்புள்ளது என வங்கி கூட்டமைப்பு தெளிவு படுத்தியுள்ளது. இதனால் எஸ்.பி.ஐ., வங்கியில் நேரடி செயல்பாடுகள் 4 நாட்களுக்கு மேல் முடங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ. 400 குறைவு!

சென்னை, மே 11–

தங்கம் விலை சற்று குறைந்துள்ளது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரண தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ. 50 குறைந்து ஒரு கிராம் ரூ.14,100–க்கும் சவரனுக்கு ரூ.400 குறைந்து ஒரு சவரன் ரூ.1,12,800–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

வெள்ளி விலையை பொறுத்தவரையில் கிராமுக்கு 5 ரூபாயும், கிலோவுக்கு 5 ஆயிரம் ரூபாயும் உயர்ந்து ஒரு கிராம் ரூ.285–க்கும்,



ஒரு கிலோ ரூ.2 லட்சத்து 85 ஆயிரத்துக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

## சினிமா துளிகள்..!

### மஞ்சுமெல் பாய்ஸ் இயக்குநரின் அடுத்த படம்! ரிலீஸ் தேதி அறிவிப்பு!



கே.வி.என் புரொடக்ஷன்ஸ் மற்றும் தெஸ்பியன் ஃபிலிம்ஸ் இணைந்து தயாரித்துள்ள, ரசிகர்கள் ஆவலுடன் எதிர்பார்க்கும் "பாலன் தி பாய்" திரைப்படத்தின் அதிகாரப்பூர்வ வெளியீட்டுத் தேதியை படக்குழுவினர் அறிவித்துள்ளனர். கேன்ஸ் திரைப்பட விழாவின் ஒரு பகுதியான 'மார்ச் டு ஃபிலிம்'–இல் (March Du Film) திரையிடப்படுவதற்கு முன்னதாக, இந்தப் படம் வருகிற ஜூன் 19, 2026 அன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகும் என உறுதி செய்யப்பட்டுள்ளது.

**ஐந்து மொழிகளில் ஒரு உணர்ச்சிகரமான பயணம்**

திரு. வெங்கட் கே நாராயணா தலைமையிலான கே.வி.என் புரொடக்ஷன்ஸ் மற்றும் திருமதி ஷைலஜா தேசாய் ஃபென் தலைமையிலான தெஸ்பியன் ஃபிலிம்ஸ் தயாரிப்பில் உருவாகியுள்ள இத்திரைப்படம் தமிழ், மலையாளம், இந்தி, தெலுங்கு மற்றும் கன்னடம் ஆகிய ஐந்து மொழிகளில் வெளியாகிறது. ஒரு மனிதனின் அடையாளம், அவனது வேர்கள் மற்றும் சமூகத்தில் அவன் கொண்டுள்ள பிணைப்பு ஆகியவற்றை மையமாகக் கொண்ட ஆழமான உணர்ச்சிகரமான கதையாக இப்படம் உருவாகியுள்ளது.

'மஞ்சுமெல் பாய்ஸ்' புகழ் இயக்குநர் சிதம்பரம் இப்படத்தை எழுதி, இயக்கியுள்ளார். ஜித்து மாதவன் இப்படத்திற்கு திரைக்கதை எழுதியுள்ளார். கேன்ஸ் திரைப்பட நிகழ்வில் திரையிடப்படுவதன் மூலம், இந்தியத் திரையுலகின் ஒரு குறிப்பிடத்தக்க படைப்பாக இது உலக அரங்கில் தடம் பதிக்கிறது. உலகளாவிய உணர்ச்சிகளை உள்ளடக்கிய ஒரு கதையாகவும், திறமையான தொழில்நுட்பக் கலைஞர்களின் கூட்டணியிலும் உருவாகியுள்ள 'பாலன் தி பாய்', இந்த ஆண்டின் மிக முக்கியமான மற்றும் கண்டிப்பாகப் பார்க்க வேண்டிய திரைப்படங்களில் ஒன்றாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020